Tamil

Australian Government
Attorney-General's Department

# அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பைப் பேணுங்கள். தொடர்ந்து தகவல்களை வழங்கிக் கொண்டிருங்கள்.

**NATIONAL SECURITY HOTLINE**
**1800 1234 00**

**பயிற்சி பெற்ற இயக்குநர்கள் ஒவ்வொரு அழைப்பையும் முக்கியமானதாகக் கையாள்வர். நீங்கள் உங்களை வெளிக்காட்டிக் கொள்ள வேண்டியதில்லை.**

## தேசிய பாதுகாப்பு – ஒவ்வொரு தகவலும் உதவும்

நாளைய அவுஸ்திரேலியாவைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்காக பொது மக்களிடமிருந்து இன்று நாம் பெறும் ஒவ்வொரு சிறிய தகவலும் பெறுமதிமிக்கதாக இருக்க முடியும். சிலவேளை மிகச் சிறியதோர் தகவல்தான் மிகப்பெரிய விளைவை ஏற்படுத்தும். எனவே சரியானதாகத் தென்படாத ஒரு விடயத்தை நீங்கள் கண்டால் அல்லது கேட்டால் தயவுசெய்து தேசிய பாதுகாப்பு இணைப்பை அழைத்து, தொடர்ந்து தகவல்களை வழங்கிக் கொண்டிருங்கள்.

## தேசிய பாதுகாப்பு தொலைபேசி இணைப்பு என்பது யாது?

தேசிய பாதுகாப்பு தொலைபேசி இணைப்பு **(1800 1234 00)** என்பது அவுஸ்திரேலியாவில் நிகழக்கூடுமான பயங்கரவாத நடவடிக்கைகளை முறைப்பாடு செய்ய அதிகாரிகளுடன் உங்களைத் தொடர்பு படுத்துகின்ற ஓர் இலவச தொலைபேசி இலக்கமாகும். இத்தொலைபேசி இணைப்பு நாளாந்தம் 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் செயற்படுகிறது. தகவல்கள் தொடர்ந்து வழங்கப்படுவது முக்கியம்—நாளைய அவுஸ்திரேலியாவைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்காக பொது மக்களிடமிருந்து இன்று நாம் பெறும் ஒவ்வொரு சிறியதோர் தகவலும் பெறுமதிமிக்கதாக இருக்க முடியும்.

## தேசிய பாதுகாப்பு தொலைபேசி இணைப்பிற்கு முறைப்பாடு செய்யப்பட வேண்டியவை யாவை?

பயங்கரவாதிகள் எதிர்பாராதவற்றிலேயே தங்கியுள்ளனர், எனவேதான் பயங்கரவாதத்தின் சாத்தியமான அடையாளங்களின் குறிப்பான பட்டியலொன்றைப் பொது மக்களுக்கு வழங்குவது என்றுமே கடினமானதாக இருக்கும். ஆயினும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவங்கள், நாம் தேடிப்பார்க்க வேண்டிய சாத்தியமான சில எச்சரிக்கை அடையாளங்களைத் தந்துள்ளன. அவுஸ்திரேலிய பாதுகாப்பு முகவர் நிருவனங்கள் அவுஸ்திரேலியாவைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்க உதவக் கடுமையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அதேவேளை, பொதுமக்கள் இப்பணியைப் பூர்த்தி செய்ய உதவமுடியும். தேடிப்பார்க்க வேண்டியவற்றிற்கான சில உதாரணங்களை மட்டும் இச்சிற்றேடு தருகிறது.

### அரச கட்டடங்ளை அல்லது முக்கிய உள்கட்டமைப்புகளை அசாதாரண விதத்தில் வீடியோ எடுத்தல் அல்லது புகைப்படமெடுத்தல்

ஓர் இலக்கைப் பற்றிப் பயங்கரவாதிகள் தகவல் சேகரிக்கும் அமைப்புகளில் ஒன்றே வீடியோ எடுத்தலாகும். ஒருவர் வீடியோவை, புகைப்படக் கருவியை அல்லது தொலைபேசிப் புகைப்படக் கருவியை அசாதாரண விதத்தில் உபயோகிப்பதை நீங்கள் கண்டால், (அத்துடன் அவர்கள் சுற்றுலாப் பயணிகளாகத் தோன்றவில்லையாயின்) அதனை முறைப்பாடு செய்யவும்.

### சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் முக்கியமான கட்டடங்களுக்கருகில் அல்லது பிரதான பொது இடங்களில் இருத்தல்

பயங்கரவாதிகள், அவதானிப்பு முதல் வெடிகுண்டுகளை வைப்பது வரையான பலதரப்பட்ட நோக்கங்களுக்காக வாகனங்களைப் பயன்படுத்துவர். வாகனங்கள் அசாதாரண விதத்தில் நீண்ட நேரம் நிறுத்தப்பட்டிருத்தல், சிலவேளைகளில நிறுத்த அனுமதிக்கப்படாத இடங்களில். வெடிபொருட்கள் பாரமானதாக இருக்கக் கூடும், எனவே மோட்டார் வண்டிகள் மற்றும் வான்கள் வழகத்திற்கு மாறான நிலையில்அவர்களுடைய தொங்கு நிலையில் (suspension ) தாழ்வாக அமர்ந்திருக்கலாம்.. அவை பதிவுசெய்யப்படாததாகவோ, அல்லது போலியானதாகவோ அல்லது இலக்கத் தகடு இல்லாமலோ இருக்கும்.

**சந்தேகத்திற்கிடமான தங்குமிட வசதித் தேவைகள்**
சிலவேளை, சிலர் சந்தேகத்திற்கிடமான விதத்தில் தங்குமிடங்களை பயன்படுத்தவோ, வாடகைக்குப் பெறவோ அல்லது வாங்கவோ கூடும், அங்கு அவர்கள் ஒரு பயங்கரவாதத் தாக்குதலை ஒருங்கிணைக்க உழைத்துக் கொண்டிருக்கக் கூடும். UK யில், வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு கராஜ், வெடிகுண்டு உற்பத்திசாலையாக மாற்றப்பட்டிருந்தது. கையுறைகள் அணிந்துகொண்ட ஆண்கள் அசாதாரண விதத்தில் வந்து செல்வது பற்றி பொது மகன் ஒருவர் முறைப்பாடு செய்தார், அதுவே ஏற்கனவே மூன்று முறை ஹீத்ரு விமான நிலையத்தை தாக்கியிருந்த பயங்கரவாதிகளைக் கைது செய்ய உதவியது.

**அசாதாரண விதத்தில் இரசாயனப் பொருட்கள், வெடிபொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படல்.**
உலகெங்கிலும் பயங்கரவாதத் தாக்குதல்களில் இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரசாயனங்கள் சாதாரணமாக வீட்டு, விவசாய, கால்நடை, கைத்தொழில் மற்றும் அழகுசாதனப் பொருட்களில் காணப்படுகின்றன. அசாதாரண விதத்தில் இரசாயனங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதை நீங்கள் கண்டால் அவற்றை தேசிய பாதுகாப்பு இணைப்பிற்கு அறியத் தரவும்.

**விந்தையான ஒரு விடயம்**
ஒரு பயங்கரவாதச் செயலைச் செய்ய எண்ணுவோர் ஓர் அசாதாரண விதத்தில் அல்லது சந்தேகத்திற்கிடமான விதத்தில் நடந்துகொள்வர், அல்லது அவர்களது வேண்டுகோள்கள் விந்தையானதாக இருக்கும். விந்தையான நடத்தைக்கான உதாரணம் செப்டம்பர் 11 இல் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு பொறுப்பான பயங்கரவாதிகளிடம் தென்பட்டது. அவர்கள் விமானத்தைச் செலுத்துவதில் பயிற்சி பெற்றனர், ஆனால் விமானத்தைப் புறப்படச் செய்யவோ அல்லது தரையிறக்கவோ கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை. ஒரு விடயம் சந்தேகத்திற்கிடமானதா இல்லையா என்பது சூழ்நிலைகளைப் பொறுத்தே அமையும். நிலைமையை முழுமையாக நோக்குங்கள். ஒருவரின் விந்தையான நடத்தை தொடர்பாக உங்களுக்கு ஏதும் அக்கறை ஏற்படின் 1800 1234 00 இல் 24 மணிநேர தேசிய பாதுகாப்பு இணைப்பை அழையுங்கள்.

**போலியான அல்லது பன்முக அடையாளங்கள்**
ஒரு பயங்கரவாதச் செயலைச் செய்யத் திட்டமிடுவோர் கடன் அட்டைகள், கடவுச்சீட்டுக்கள், மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் முதலிய திருடப்பட்ட அல்லது போலியான ஆவணங்களை அடிக்கடி பயன்படுத்துவர். அவர்கள் பன்முக அடையாளங்களையும் கொண்டிருக்கக் கூடுமானதுடன் தாம் தொடர்பு கொள்பவர்களுக்கு முரண்பட்ட விவரங்களை வழங்கக் கூடும்.

நினைவில் கொள்ளுங்கள்: சிலபோது மிகச் சிறிய தகவல்தான் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. உங்களுக்கு அக்கறை ஏற்படுத்தக்கூடிய நடத்தையொன்றைக் கண்டால் அல்லது அறிந்தால், அதுபற்றி முடியுந்தளவுக்கு அதிக விவரங்களை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். அதிகாரிகளுக்கு உதவக்கூடிய விவரங்களுள் உள்ளடங்குபவை: தெருவின் முகவரிகள், திகதிகள், நேரங்கள், தொலைபேசி இலக்கங்கள், இலக்கத் தகடுகள் மற்றும் விளக்கங்கள்.

## தொடர்பு விபரங்கள்
சரியானதாகத் தென்படாத ஒரு விடயத்தை நீங்கள் கண்டால் அல்லது கேட்டால் தயவுசெய்து தேசிய பாதுகாப்பு தொலைபேசி இலக்கத்தை அழைத்து, தொடர்ந்து தகவல்களை வழங்கிக் கொண்டிருங்கள். நினைவில் கொள்ளுங்கள், சிலவேளை மிகச் சிறியதோர் தகவல்தான் மிகப்பெரிய விளைவை ஏற்படுத்தும்.

தொலைபேசி: **1800 1234 00**
மின்னஞ்சல்: hotline@nationalsecurity.gov.au
செல்க: australia.gov.au/nationalsecurity